உ

திருச்சிற்றம்பலம்

தேவாரத் திரட்டு

இஃது
சைவ சமயாசாரியர்கள் நால்வர் திருவாய் மலர்ந்தருளிய
தேவார திருவாசகமும்
நால்வரது துதியும் சேர்ந்தது.

ஸ்ரீமகள் கம்பெனி
12. வரதாமுத்தியப்பன் தெரு. சென்னை-1

சுத்த பதிப்பு

விலை 50 காசு

எமது கிளை நிலயங்கள்:

150, நேதாஜி ரோடு,
மதுரை-1

14, சின்னக்கடைத் தெரு,
திருச்சி-2

202, வெரைட்டி ஹால் ரோடு,
கோயமுத்தூர்-1

4, சிவாஜி ரோடு,
பெங்களூர்–1

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, சைனு பஜார், சென்னை-1

உ

சிவமயம்

திருஞானசம்பந்தர் அருளிச்செய்த

தேவாரப் பதிகங்கள்

*திருப்பிரமபுரம்-பண்-நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக், காடுடையசுடலைப் பொடிபூசியென் னுள்ளங் கவர்கள்வ, னேடுடையமலரான் முனைநாட்பணிந் தேத் தவருள் செய்த, பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மா னிவனன்றே

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம் பவை பூண்டு, வற்றலோடுகலனாப்பலி தேர்ந்தென துள் ளங்கவர்கள்வன், கற்றல்கேட்டலுடை யார்பெரியார் கழல் கையாற்றொழுதேத்தப், பெற்றமூர்ந்த பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே. 2

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதி சூடி, ஏர்பரந்தவின வெள்வளைசோர்வென் னுள்ளங் கவர்கள்வன், னூர்பரந்தவுலகின்முதலாகிய வோரூரிவ ரென்னப், பேர்பரந்த பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே. 3

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலை யோட்டி, லுண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்

---

*திருப்பிரமபுரமென்பது சீர்காழி

கவர்கள்வன்,மண்மகிழ்ந்தவர வம்மலர்கொன்றை மலிந்தவரைமார்பிற், பெண்மகிழ்ந்த பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. 4

ஒருமை பெண்மை யுடையன் சடையன் விடைபூரும்மிவனென்ன, வருமையாகவுரை செய்யவமர்ந்தென துள்ளங்கவர்கள்வன், கருமைபெற்றகடல் கொள்ளமிதந்தோர் காலம்மிதுவென்னப், பெருமை பெற்றபிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. 5

மறைகலந்தவொலிபாடலோடாடலராகிமழுவேந்தி, யிறைகலந்தவின வென்வளைசோர வென்னுள்ளங்கவர் கள்வன், கறைகலந்தகடிமார் பொழில்நீடுயர் சோலைக் கதிர்சிந்தப், பிறைகலந்த பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. 6

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச்சதிர்வெய்த, யுடைமுயங்குமர வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன், கடைமுயங்குகழிசூழ் குளிர்கானம் பொன்னஞ்சிறகன்னம், பெடைமுயங்கு பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே. 7

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த, வுயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன், றுயரிலங்குமுல கிற்பலவூழிக டோன்றும் பொழுதெல்லாம், பெயரிலங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. 8

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமறையானும், நீணுதல் செய்தொழியந்நிமிர்ந்தா னென துள்ளங்கவர்கள்வன், வாணுதல்செய்மகளிர் முதலா

கிய வையத்தவரேத்தப், பேணுதல்செய் பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே. 9

புத்தரோடு பொறியில் சமணும் புறங்கூறநெறி நில்லா, வொத்த சொல்லவுலகம்பலிதேர்ந்தெனதுள்ளங் கவர்கள்வன், மத்தவானை மறுகவ்வுரிபோர்த்ததோர் மாயம்மிது வென்னப், பித்தர்போலும்பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. 10

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கைமலர் மேய, பெருநெறிய பிரமாபுரமேவிய பொம்மானிவன் றன்னை, பொருநெறிய மனம்வைத்துணர்ஞானசம்பந்த னுரை செய்த, திருநெறியதமிழ்வல்லவர் தொல்வினை தீர்த்தலெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-பிரமபுரீசர்
தேவியார்-திருநிலைநாயகியம்மை.

திருவாலவாய் திருநீற்றுப்பதிகம்-பண்-காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன் றிருவாலவாயான் றிருநீறே. 1

வேதத்திலுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறு புன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறு வுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்த திருவாலவாயான் றிருநீறே. 2

முத்திதருவதுநீறு முனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறு தக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறு பரவவினியதுநீறு
சித்திதருவதுநீறு திருவாலவாயான்றிருநீறே. 3

காணவினியதுநீறு கவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறு மதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறு திருவாலவாயான்றிருநீறே. 4

பூசவினியதுநீறு புண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லாம்
ஆசைகெடுப்பதுநீறு அந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறு திருவாலவாயான்றிருநீறே. 5

அருத்தமாவதுநீறு அவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறு வானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறு புண்ணியர்பூசும் வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்த திருவாலவாயான்றிருநீறே.6

எயிலதுவட்டதுநீறு இருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறு பாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறு சுத்தமதாவதுநீறு
அயிலைப்பொலிதருசூலத் தாலவாயான்றிருநீறே. 7

இராவணன்மேலதுநீறு எண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறு பாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறு தத்துவமாவதுநீறு
அராவணங்குந்திருமேனி யாலவாயான்றிருநீறே. 8

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண் மெய்யதுவெண்பொடிநீறு

வேலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவதுநீறு
வாலமுதுண்டமிடற்றெம் மாலவாயான்றிருநீறே. 9

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறு கருதவினியதுநீறு
வெண்டிசைபட்டபொருளா ரேத்துந்தகைமதுநீறு
வண்டத்தவர்பணிந்தேற்று மாலவாயான்றிருநீறே. 10

ஆற்றலடல்விடையேறு மாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும் பூசுரன்ஞானசம்பந்தன்
றேற்றித்தென்னனுடலுற்ற தீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லபர் நல்லவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

இப்பதிகம் பாண்டியராஜனுடைய சுரவியாதி தீர
அருளிச் செய்யப்பட்டது.
சுவாமி பெயர்-சொக்கநாதேசுவரர்
தேவியார்-மீனாட்சியம்மை.

வேயுறுதோழி-பண்-பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறுதோழி பங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்லவீணை தடவி, மாசறுதிங்கள் கங்கைமுடிமேலணிந் தெனுளமேபுகுந்த வதனால், ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே, மாசறுநல்ல நல்ல வவைநல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை யிவை மார்பிலங்க வெருதேறி யேழையுடனே, பொன்பொதி மத்த மாலை

புனல்சூடி வந்தென துளமே புகுந்த வதனு, லொன்பதொடொன்றோ டேழுபதி னெட்டொடாறுமுட னுயநாள்களவைதா, மன்பொடு நல்லநல்ல வவைநல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி யொளிநீறணிந்து வுமையோடும் வெள்ளைவிடைமேன், முருகலர்கொன்றைதிங்கண் முடிமேலணிந்தென துளமேபுகுந்த வதனாற், றிருமகள் கலையதூர்தி செயமாதுபூமிதிசை தெய்வமான பலவு, மருநெதி நல்ல நல்ல வவைநல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 3

மதிநுதன் மங்கையோடுவடபாலிருந்து மறையோதுமெங்கள் பரம, னதியொடு கொன்றை மாலைமுடி மேலணிந்தெனுளமே புகுந்தவதனாற், கொதியுறு காலனங்கி நமனோடு தூதர் கொடுநோய்களானபலவு, மதிகுண நல்லநல்ல வவை நல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 4

நஞ்சணிகண்டனெந்தை மடவாடனோடும் விடையேறுமெங்கள் பரமன், றுஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேலணிந்த னுளமேபுகுந்த வதனால், வெஞ்சினவவுணரோடு முருமிடியுமின்னு மிகையான பூதமவையு, மஞ்சிடு நல்ல நல்ல வவைநல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 5

வாள்வரி யதளதாடைவரிகோவணத்தார் மடவாடனோடு முடனாய், நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெனுளமே புகுந்த வதனாற், கோளரியுழுவையோடு கொலை யானை கேழல் கொடு நாகமோடு கரடி, யாளரி நல்ல நல்ல வவைநல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 6

செப்பிளமுலை நன்மங்கையொடு பாகமாகவிடை யேறு செல்வர் நடைவா, ரொப்பிளமதியு மப்புமுடிமே லணிந்தெனுளமே புகுந்தவதனல், வெப்பொடு குளிரும் வாத மிகையான பித்தும் வினையான வந்து நலியா, வப்படி நல்ல நல்ல வவைநல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 7

வேள்படவிழிசெய்தன்று விடைமேலிருந்துமடவா டனேடு முடனாய், வண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெனுளமே புகுந்த வதனு, லேழ்கடல் சூழிலங்கை யரை யன்றனேடு மிடருன வந்து நலியா, வாழ்கடநல்ல நல்ல வவைநல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனரிபாகன்பசுவேறு மெங் கள்பரமன், சலமகளோ டெருக்கு முடிமேலணிந்தெ னுளமே புகுந்த வதனன், மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்வரு காலமான பலவு, மலைகடன் மேரு நல்ல நல்ல வவைநல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடும் விசயற்குநல்ல குண மாயவேட விகிர்தன், மத்தமு மதியுமாக முடிமேலணிந் தெனுளமே புகுந்த வதனற், புத்தரொடமணைவாதி லழி விக்கு மண்ணல் றிருநீறு செம்மைதிடமே, யத்தகு நல்ல நல்ல வவைநல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில் கொளாலை விளைசெந் நெறு கனி வளர்செம்பொ னெங்குநிகழ, நான்முகனுதியாய பிரமா புரத்து மறைஞான ஞானமுனிவன், றானுறு கோளு நாளு மடியாரை வந்து நலியாத வண்ண முரை செய், யானசொன மாலையோது மடியார்கள் வானி லர சாளவராணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

இப்பதிகம் பாண்டியராஜனுடைய சுரவியாதி தீர அருளிச்செய்தது.

திருப்பஞ்சாக்கரம்-பண்-காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந்துஞ்ச லிலாதபோழ்தினு
நெஞ்சகநைந்து நினைமினாடொறும்
வஞ்சகமற்றடி வாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத்தன வஞ்செழுத்துமே. 1

மந்திரநான்மறை யாகிவானவர்
சிந்தையுணின்றவர் தம்மையாள்வன
செந்தழலோம்பிய செம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திர மஞ்செழுத்துமே. 2

ஊனிலுயிர்ப்பை யொடுக்கியொண்சுடர்
ஞானவிளக்கினை யேற்றிநன்புலத்
தேனைவழிதிறந் தேத்துவார்க்கிட
ரானகெடுப்பன வைந்தெழுத்துமே. 3

நல்லவர்தீய ரெனாதுநச்சினர்
செல்லல்கெடச்சிவ முத்திகாட்டுவ
கொல்லநமன்றமர் கொண்டுபோமிடத்
தல்லல்கெடுப்பன வஞ்செழுத்துமே. 4

கொங்கலர்வன்மதன் வாளியைந்தகத்
தங்குளபூதமு மஞ்சவைம்பொழிற்
றங்கரவின்பட மஞ்சுதம்முடை
யங்கையிலைவிர லஞ்செழுத்துமே. 5

தும்மலிருமற் றொடர்ந்தபோழ்தினும்
வெம்மைநரகம் விளைந்தபோழ்தினு
மிம்மைவினையடர்த் தெய்தும்போழ்தினு
மம்மையினுந்துணை யஞ்செழுத்துமே. 6

வீடுபிறப்பை யறுத்துமெச்சினர்
பீடைகெடுப்பன பின்னைநாடொறு
மாடுகெடுப்பன மன்னுமாநட
மாடியுகப்பன வஞ்செழுத்துமே. 7

வண்டமரோதி மடந்தபேணின
பண்டையிராவணன் பாடியுய்ந்தன
தொண்டர்கள்கொண்டு துதித்தபின்னவர்க்
கண்டமளிப்பன வஞ்செழுத்துமே. 8

கார்வணனான்முகன் காணுதற்கொணச்
சீர்வணச்சேவடி செவ்விநாடொறும்
பேர்வணம்பேசிப் பிதற்றும்பித்தர்கட்
கார்வணமாவன வஞ்செழுத்துமே. 9

*புத்தர் சமண்கழுகையர் பொய்கொளாச்
சித்தத்தவர்க டெளிந்துதேறின
வித்தக நீறணி வார்வினைப்பகைக்
கத்திரமாவன வஞ்செழுத்துமே. 10

நற்றமிழ்ஞானசம் பந்தனுன்மறை
கற்றவன் காழியர் மன்னனுன்னிய
வற்றமின்மாலையீ ரைந்துமஞ்செழுத்
துற்றனவல்லவ ரும்பராவரே. 11

திருச்சிற்றம்பலம்

---

*தலையிடறச்செய்தது இப்பத்தாவது திருச்செய்யுள்.

நமச்சிவாயத் திருப்பதிகம்-பண்-கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

காதலாகிக் கசிந்துகண்ணீர்மல்கி
யோதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினு மெய்ப்பொருளாவது
நாதநாம நமச்சிவாயவே. 1

நம்புவார்நமலர் நாவினவிற்றினல்
வம்புநாண்மலர் வார்மதுவொப்பது
செம்பொனூர்தில கம்முலகுக்கெலா
நம்பனும நமச்சிவாயவே. 2

நெக்குலார்வ மிகப்பெருகிங்கினைந்
தக்குமாலைகு டங்கையிலெண்ணுவார்
தக்கவானவ ராத்தகுவிப்பது
நக்கனும நமச்சிவாயவே. 2

இயமன்றூதரு மஞ்சுவரின்சொலா
னயம் வந்தோதவல் லார்தமை நண்ணினு
னியமந்தானினை வார்க்கினியானெற்றி
நயனனும நமச்சிவாயவே- 4

கொல்வாரேனுங் குணம்பலநன்மைக
ளில்லாரே னு மியம்புவராயிடி
னெல்லாத்தீங்கையு நீங்குவரென்பார்
னல்லார்நாம நமச்சிவாயவே. 5

மந்தரம்மன பாவங்கண்மேவிய
பந்தனையவர் தாமும்பகர்வரேற்
சிந்தும்வல்வினை செல்வமுமல்குமா
னந்திநாம நமச்சிவாயவே. 6

நரகமேழ்புக நாடின ராயினு
முரை செய்வாயின ராயினுருத்திரர்
விரவியேபுகு வித்திடுமென்பரால்
வரதனும நமச்சிவாயவே. 7

இலங்கைமன்ன னெடுத்தவடுக்கன்மேற்
றலங்கொள்கால்விரல் சங்கர னூன்றலு
மலங்கிவாய்மொழி செய்தவனுய்வகை
நலங்கொணும நமச்சிவாயவே. 8

போதன்போதன கண்ணனும்மண்ணறன்
பாதந்தான்முடி நேடியபண்பரா
யாதுங்காண்பரி தாகியலந்தவ
ரோதுநாம நமச்சிவாயவே. 9

கஞ்சிமண்டையர் கையிலுண்கையர்கள்
வெஞ்சொன்மிண்டர் விரவிலரென்பரால்
விஞ்சையண்டர்கள் வேண்டவமுதுசெய்
நஞ்சுண்கண்ட நமச்சிவாயவே. 10

நந்திநாமநமச்சிவாயவெனுஞ்
சந்தையாற்றமிழ் ஞானசம்பந்தன்சொற்
சிந்தையான் மகிழ்ந் தேத்தவல்லாரெல்லாம்
பந்தபாச மறுக்கவல்லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

திருமயிலாப்பூர்

பூம்பாவைத் திருப்பதிகம், பண்-சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

மட்டிட்டபுன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான் காபலீச்சரமமர்ந்தா
னெட்டிட்டபண்பி லுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல்காணாதே போதியோ பூம்பாவாய். 1

மைப்பயந்தவொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்தநீற்றான் கபாலீச்சரமமர்ந்தா
னைப்பசியோணவுழாவு மருந்தவர்க
டுய்ப்பனவுங்காணாதே போதியோ பூம்பாவாய். 2

வளைக்கைமடநல்லார் மாமயிலைவண்மறுகிற்
றுளக்கில்கபாலீச்சரத்தான் றொல்கார்த்திகைநாட்
டளத்தேந்திள முலையார் தையலார்கொண்டாடும்
விளக்கீடுகாணாதே போதியோ பூம்பாவாய். 3

ஊர்திரைவேலையுலாவு முயர்மயிலைக்
கூர்தருவேல்வல்லார் கொற்றங்கொள்சேரிதனிற்
கார்தருசோலைக் கபாலீச்சரமமர்ந்தா
னாதிரைநாள்காணாதே போதியோ பூம்பாவாய். 4

மைப்பூசு மொண்கண்மட நல்லார்மாகயிலைக்
கைப்பூசுநீற்றான் கபாலீச்சரமமர்ந்தா
னெய்ப்பூசுமொண்புழுக்க னேரிழையார்கொண்டாடுந்
தைப்பூசங்காணாதே போதியோ பூம்பாவாய். 5

மடலார்ந்ததெங்கின் மயிலையார்மாசிக்
கடலாட்டுக்கண்டான் கபாலீச்சரமமர்ந்தா
னடலானேறூரு மடிகளடி பரவி
நடமாடல்காணாதே போதியோ பூம்பாவாய். 6

மலிவிழாவீதிமடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக்கண்டான் கபாலீச்சரமமர்ந்தான்
பலிவிழாப்பாடல்செய் பங்குனியுத்திரநா
ளொலிவிழாக்காணுதே போதியோ பூம்பாவாய். 7

தண்ணுவரக்கன்றோள் சாய்த்துகந்ததாளினன்
கண்ணார்மயிலைக் கபாலீச்சரமமர்ந்தான்
பண்ணார் பதினெண்கணங் கடம்மட்டமிநாட்
கண்ணார்க்காணுதே போதியோ பூம்பாவாய். 8

நற்றாமரைமலர்மே லான் மூகனுநாரணனு
மூற்றுங்குணர்கிலா மூர்த்திதிருவடியைக்
கற்றார்களேத்துங் கபாலீச்சரமமர்ந்தான்
பொற்றாப்புக்காணுதே போதியோ பூம்பாவாய். 9

உரிஞ்சாயவாழ்க்கை யமணுடையப்போர்க்கு
மிருஞ்சாக்கியர்க ளெடுத்துரைப்பநாட்டிற்
கருஞ்சோலைசூழ்ந்த கபாலீச்சரத்தான்றன்
பெருஞ்சாதிகாணுதே போதியோ பூம்பாவாய். 10

கானமர்ச்சோலைக் கபாலீச்சரமமர்ந்தான்
றேனமர்பூம்பாவைப் பட்டாகச்செந்தமிழான்
ஞானசம்பந்த னலம்புகழ்ந்தபத்தும்வல்லார்
வானசம்பந்தத்தவ ரோடும்வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

இது எலும்பு பெண்ணாக வோதியருளிய பதிகம்
சுவாமி பெயர்-கபாலீசுரர்.
தேவியார்-கற்பகவல்லியம்மை.
திருஞானசம்பந்த சுவாமிகள் திருவடிகளே சரணம்

உ

சிவமயம்

திருநாவுக்கரசு சுவாமிகள் செய்தருளிய

தேவாரப் பதிகங்கள்

திரு அங்கமாலை-பண்-சாதாரி

திருச்சிற்றம்பலம்

தலையே நீ வணங்காய்-தலை
 மாலைதலைக் கணிந்து
தலையாலேபலி தேருந்தலைவனைத்
 தலையேநீ வணங்காய். 1

கண்காள் காண்மின்களோ-கடல்
 நஞ்சுண்ட கண்டன்றன்னை
யெண்டோள்வீசி நின்றாடும்பிரான்றன்னைக்
 கண்காள் காண்மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ-சிவ
 னெம்மிறை செம்பவள
எரிபோல்மேனிப்பிரான் றிறமெப்போதுஞ்
 செவிகாள் கேண்மின்களோ. 3

மூக்கேநீ முரலாய்-முது
 காடுறை முக்கணனை
வாக்கேநோக்கிய மங்கைமணாளனை
 மூக்கேநீ முரலாய். 4

வாயேவாழ்த்து கண்டாய்-மத
யானையுரி போர்த்துப்
பேய்வாழ்காட்டகத்தாடும் பிரான்றன்னை
வாயேவாழ்த்து கண்டாய். 5

நெஞ்சேநீ நினையாய்-நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சேநீ நினையாய். 6

கைகாள் கூப்பித் தொழீர்-கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப்பாம்பரை யார்த்தபரமனைக்
கைகாள்கூப்பித் தொழீர். 7

ஆக்கையாற் பயனென் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையாலட்டிப் போற்றியென்னாதவிவ்
வாக்கையாற் பயனென். 8

கால்களாற்பயனென்-கறைக்
கண்டனுறை கோயில்
கோலக்கோபுரக் கோகரணஞ்சூழாக்
கால்களாற் பயனென். 9

உற்றாரா ருளரோ-வுயிர்
கொண்டுபோம் பொழுது
குற்றாலத்துறைகூத்த னல்லானமக்
குற்றாரா ருளரோ. 10

இறுமாந் திருப்பன்கொலோ-வீசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்

சிறுமானேந்திதன் சேவடிகீழ்சென்றங்
கிறுமாந்திருப் பன்கொலோ. 11

தேடிக்கண்டு கொண்டேன்-திரு
மாலொடு நான்முகனுந்
தேடித்தேடொணாத் தேவனையென்னுள்ளே
தேடிக்கண்டு கொண்டேன். 12

திருச்சிற்றம்பலம்

கோயிற்றிருநேரிசை-பண் கொல்லி

திருச்சிற்றம்பலம்

பத்தனாய்ப்பாடமாட்டேன் பரமனேபரமயோகி
எத்தினாற்பத்திசெய்கே னென்னைநீயிகழவேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை யம்பலத்தாடுகின்ற
அத்தாவுன்னாடல்காண்பா னடியனேன் வந்தவாறே. 1

கருத்தினாப்பாடமாட்டேன் காம்பனதோளிபங்கா
வொருத்தராலறியவொண்ணாத் திருவுருவுடையசோதி
திருத்தமாந்தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற்றம்பலத்தே
நிருத்தநான் காணவேண்டி நேர்படவந்தவாறே. 2

கேட்டிலேன்கிளைபிரியேன் கேட்குமாகேட்டியாகில்
நாட்டினேனின்றன்பா நடுப்படநெஞ்சினுள்ளே
மாட்டினீர்வாளைபாயு மல்குசிற்றம்பலத்தே
கூட்டமாங்குவிமுலையாள் கூடநீயாடுமாறே. 3

சிந்தையைத்திகைப்பியாதே செறிவுடையடிமைசெய்ய
எந்தைநீயருளிச்செய்யா யாதுநான்செய்வதென்ன

செந்தீமா வேள்வியோவாத் தில்லைச்சிற்றம்பலத்தே
யந்தியும்பகலுமாட வடியிணையலசுங் கொல்லோ. 4

கண்டவாதிரிந்துநாளுங் கருத்தினுல்நின்றன்பாதங்
கொண்டிருந்தாடிப்பாடிக் கூடுவன்குறிப்பினுலே
வண்டுபண்பாடுஞ்சோலை மல்குசிற்றம்பலத்தே
யெண்டிசையோருமேத்த யிறைவாநீயாடுமாறே. 5

பார்த்திருந்தடியேனுன் பாவலன்பாடியாடி
மூர்த்தியேயென்பனுன்னை மூவரில்முதல்வனென்பன்
ஏத்துவாரிடர்சடர்ப்பாய் தில்லைச்சிற்றம்பலத்துக்
கூத்தாவுன் கூத்துக்காண்பான் கூடநான்வந்தவாறே.6

பொய்யினைத்தவிரவிட்டுப் புறமலா வடிமைசெய்ய
ஐயநீயருளிச்செய்யா யாதியேயாதிமூர்த்தி
வையகந்தன்னின்மிக்க மல்குசிற்றம்பலத்தே
பையநின்னுடல்காண்பான் பரமநான்வந்தவாறே. 7

மனத்தினுற்றிகைத்துநாளு மாண்பலாநெறிகண்மேலே
கனைப்பராலென்செய்கேனேகறையணிகண்டத்தானே
தினைத்தனை வேதங்குன்றுத் தில்லைசிற்றம்பலத்தே
யனைத்துநின்னிலயங்காண்பானடியனேன்வந்தவாறே.

நெஞ்சினைத்தூய்மைசெய்து நினைக்குமாநினைப்பியாதே
வஞ்சமேசெய்தியாலோ வானவர்தலைவனே நீ
மஞ்சடைசோலைத்தில்லை மல்குசிற்றம்பலத்தே
யஞ்சொலால்காணநின்று வழகநீயாடுமாறே. 9

மண்ணுண்டமாலவனு மலர்மிசைமன்னினுனும்
விண்ணுண்டதிருவுருவம் விரும்பினுர்காணமாட்டார்
திண்ணுண்டதிருவேமிக்க தில்லைசிற்றம்பலத்தே
பண்ணுண்டபாடலோடும் பரமநீயாடுமாறே. 10

திருச்சிற்றம்பலம்

சுவாமி பெயர்-திருமூலநாயகர், சபாநாதர்,
தேவியார்-உமாதேவியார், சிவகாமியம்மை.

நமச்சிவாயப்பதிகம்-பண்-காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணைவேதியன் சோதிவானவன்
பொற்றுணைதிருந்தடி பொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே. 1

பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை
யாவினுக்கருங்கலம் அரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக்கருங்கல நமச்சிவாயவே. 2

விண்ணுறவடுக்கிய விறகின் வெவ்வழ
லுண்ணியபுகிலவை யொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற் பயின்றபாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சிவாயவே. 3

இடுக்கண்பட்டிருக்கினு மிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்று வினவுவோமல்லோம்
அடுக்ககீழ்நடக்கினு மருளினுமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே. 4

வெந்தநீறருங்கலம் விரதிகட்கெலா
மந்தணர்க்கருங்கல மருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந் திகழுநீண்முடி
நங்களுக்கருங்கல நமச்சிவாயவே. 5

சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கல்லா
நலமிலனொடொறு நல்குவானவன்
குலமிலராகினுங் குலத்திற்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பது நமச்சிவாயவே. 6

வீடினாலருகினில் விழுமியதொண்டர்
கூடினாரந்நெறி கூடச்சென்றது
மோடினேனோடிச்சென் றுருவங்காண்டலு
நாடினேனோடிற்று நமச்சிவாயவே. 7

இல்லகவிளக்கது விருள்கெடுப்பது
சொல்லகவிளக்கது சோதியுள்ளது
பல்லகவிளக்கது பலருங்காண்பது
நல்லகவிளக்கது நமச்சிவாயவே.

முன்னெறியாகிய முதல்வன்முக்கணன்
தன்னெறியேசர ணாதல்திண்ணமே
பன்னெறியேசென் றங் கடைந்தவர்க்கெலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே. 9

மாப்பிணைதழுவிய மாதோர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடி பொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவிய நமச்சிவாயப்பத்
தேத்தவல்லோர்தமக் கிடுக்கணில்லையே. 10

திருச்சிற்றம்பலம்

இது சமணர்களை கற்றூணிற் கட்டி கடலிலே
வீழ்த்தினபோது ஓதி அருளியது.

திருவண்ணாமலை-திருநேரிசை-பண்-கொல்லி

திருச்சிற்றம்பலம்

ஓதிமாமலர்கடூவியுமை யவள்பங்காமிக்க
சோதியேதுலங்குமெண் டோட்கடர்மழுப்படையினானே
யாதியேயமரர்கோவே யணியணாமலையுளானே
நீதியானின்னையல்லா னினையுமாநினைவிலேனே. 1

பண்டனைவென்றவின்சொற் பாவைமோர்பங்கலை
கண்டனேகார் கொள்கொன்றைக்கடவுளேகமலபாதா
அண்டனேயமரர்கோவே யணியணுமலையுளானே
தொண்டனேனுன்னையல்லாற் சொல்லுமாசொல்லிலேனே. 2

உருவமுமுயிருமாகி யோதியவுலகுக்கெல்லாம்
பெருவினைபிறப்புவீடாய் நின்றவெம்பெருமான்மிக்க
அருவிபொன்சொரியுமண்ணு மலையுளாயண்டர்கோவே
மருவிநின்பாதமல்லான் மற்றொருமாடிலேனே. 3

பைம்பொனேபவளக்குன்றே பரமனே பால்வெண்
ணீற்றாய்,செம்பொனேமலர்செய்பாதா சீர்தருமணியே
மிக்க, அம்பொனே கொழித்துவீழு மணியணுமலையு
ளானே, என்பொனே யுன்னையல்லா லேதுநானினை
விலேனே. 4

பிறைமணிமுடியினுனே பிஞ்ஞகப்பெண்ணோர்பாகா
மறைவலாவிறைவாவண்டோர் கொன்றையாய்வாமதே
வறைகழலமரரேத்து மணியணுமலையுளானே [வர்
யிறைவனேயுன்னையல்லாலியா துநானினைவிலேனே. 5

புரிசடைமுடியின்மேலோர் பொருபுனற்கங்கைவைத்
கரியுரிபோர்வையாகக் கருதியகாலகாலா [துக்
அரிகுலமலிந்தவண்ணு மலையுளாயலரின்மிக்க
வாரிமிகுவண்டுபண்செய் பாதநான்மறப்பிலேனே. 6

இரவியுமதியும்விண்ணு மிருநிலம்புலனுங்காற்று
மூரகமார்புவனமெட்டுந் திசையொளியுருவமானு
யாவுமிழ்மணிகொள்சோதி யணியணுமலையுளானே
பரவுநின்பாதமல்லாற் பரமநான்பற்றிலேனே. 7

பார்த்தனுக்கன்றுநல்கிப் பாசுபதத்தையீந்தாய்
நீர்த்ததும்புலாவுகங்கை நெடுமுடிநிலாவவைத்தா

மார்த்துவங்கீண்டுகொண்ட லணியண்ணமலையுளானே
தீர்த்தனேநின்றன்பாதத் திறமலாற்றமிலேனே. 8

பாலுநெய்முதலாமிக்க பசுவிலைந்தாடுவானே
மாலுநான்முகனுங்கூடிக் காண்கிலாவகையுணின்றாய்
ஆலுநீர்கொண்டல்பூக மணியண்ணமலையுளானே
வாலுடைவிடையாயுன்றன் மலரடிமறப்பிலேனே. 9

இரக்கமொன்றியாதுமில்லாக் காலனைக்கடிந்தவெம்மா
னுரத்தினல்வரையையூக்க லொருவிரனுதியினலே
யரக்கனைநெரித்தவண்ண மலையுளாயமரரேறே
சிரத்தினல்வணங்கியேத்தித் திருவடிமறப்பிலேனே.10

திருச்சிற்றம்பலம்

இது நடுநாட்டிலுள்ளது.
சுவாமி பெயர்-அருணசலேசுவரர்.
தேவியார்-உண்ணமுலையம்மை.

கோயில்-பெரிய திருத்தண்டகம்

திருச்சிற்றம்பலம்

அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை யருமறையினகத்தானை யணுவையார்க்குந், தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத் திகழொளியைத் தேவர்கடங் கோனைமற்றைக், கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக் கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற, பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 1

கற்றானைக் கங்கைவார் சடையான்தன்னைக் காவிரிசூழ் வலஞ் சுழியுங் கருதினானை, மற்றானை யலந்தார்க்கு

மருள் செய்வானை யாரும்யுகுவானையறிந்தோமன்றே, மற்றுருந் தன்னெப்பாரில்லாதானை வானவர்க ளெப்பொழுதும் வணங்கியேத்தப், பெற்றனைப் பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 2

கருமானினுரியதனை யுடையாவீக்கிக் கனைகழல்கள் கலந்தொலிப்ப வனல்கையேந்தி, வருமானத் திரடோள்கள் மட்டித்தாட வளர்மதியுஞ் சடைக்கணிந்து மானேர்நோக்கி, யருமான வாண்முகத்தா ளமர்ந்து காண வமரர்கண முடி வணங்க வாடுகின்ற, பெருமானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 3

அருந்தவர்க டொழுதேத்து மப்பன்றன்னை யமரர் கடம்பெருமானை யரனைமூவா, மருந்தமரர்க் கருள்புரிந்த மைந்தன்றன்னை மறிகடலுங் குலவரையும் மண்ணும் விண்ணும், திருந்தொளிய தாரகையுந் திசைகளெட்டுந் திரிசுடர்களோரிரண்டும் பிறவுமாய, பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 4

அருந்துணையை யடியார்த்த மல்லதீர்க்கு மருமருந்தை யகன்ஞாலத் தகத்துட்டோன்றி, வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டுவான்புலன்க ளகத்தடக்கி மடவாரோடும், பொருந்தணைமேல் வரும்பயனைப் போகமாற்றிப் பொது நீக்கித் தனைநினைய வல்லார்க்கென்றும், பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 5

கரும்பமரு மொழிமடவாள் பங்கன்றன்னைக் கனவயிரக் குன்றனைய காட்சியானை, யரும்பமரும் பூங்

கொன்றைத் தாரான்றன்னை யருமறையோ டாறங்க மாயினனைச், சுரும்பமருங் கடிபொழில்கள் சூழ்தென் னூர்ச்சுடர் கொழுந்தைத் துளக்கிலா விளக்கைமிக்க, பெரும்பொருளைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 6

வரும்பயனை யெழுநரம்பி னோசையானை வரைசிலை யாவானவர்கள்முயன்றவாளி,யரும்பயஞ்செயவுணர்புர மெரி யக்கோத்தவம்மானை யலைகடனஞ் சயின்றான் றன்னைச், சுரும்பமருங் குழன்மடவார் கடைக்கணாற் கிற் றுளங்காத சிந்தையராய்த் துறந்தோருள்ளப், பெரும்பயனைப் பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே, 7

காரானை யீருரியைப் போர்வையானைக் காமருபூங் கச்சி யேகம்பன்றன்னை, யாரேனு மடியவர்கட் கணி யான்றன்னை யமரர்களுக்கறிவரிய வளவிலானைப், பாரோரும் விண்ணோரும் பணிய நட்டம் பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனையெண்ணிப் பேரானைப் பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 8

முற்றாத பான்மதியஞ் சூடினானை மூவுலகுந் தானாய முதல்வன் றன்னைச், செற்றார்கள்புரமூன்றுஞ் சென் றான் றன்னைத்திகழொளியை மரகதத்தைத் தேனைப் பாலைக், குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன்றன்னைக் கூத்தாட வல்லானைக் கோனைஞானம், பெற்றார்கள் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 9

காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங் கடிக்க மலத் திருந்தயனுங் காணவண்ணஞ், சீரொளிய தழற்

பிழம்பாம் நிறை தொல்லைத் திகழொளியச் சிந்தைதனை மயக்கந்தீர்க்கு, பேரொளியை யிருநிலனும் விசும்பும் விண்ணு மேழுலகுங் கடந்தண்டத் தப்பால் நின்ற, பேரொளியைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 10

திருச்சிற்றம்பலம்

திருஆவடுதுறை திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

திருவே யென்செல்வமே தேனேவானோர் செழுஞ் சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க, வுருவேயென் னுறவே யென்னூனே யூனினுள்ளமே யுள்ளத்தி னுள்ளேநின்ற, கருவேயென் கற்பகமே கண்ணே கண் ணிற் கருமணியே மணி யாடு பாவாய்காவா, யருவாய வல்வினைநோ யடையாவண்ண மாவடுதண்டுறையுறையு மமரரேறே. 1

சிலைத்தார் திரிபுரங்க டீயில்வேவச் சிலைவளைவித் துமை யவளையஞ்சநோக்கிக், கலித்தாங் கிரும்பிடிமேற் கைவைத்தோடுங் களிறுரித்த கங்காள வெங்கள் கோவே, நிலத்தாரவர்தமக்கே பொறையாய் நாளு நில்லாவுயி ரோம்புநீதானே நான், அலுத்தேனடியேனை யஞ்சலென்னு யாவடுதண்டு றையுறையு மமரரேறே. 2

துறந்தார்தந் தூநெறிகட் சென்றேனல்லேன் றுணைமாலை சூட்டநான் றாயேனல்லேன், பிறந்தே னின் றிருவருளேபேசினல்லாற் பேசாத நாளெல்லாம்

பிறவானாளே, செறிந்தார் மதிவிலங்கைக் கோமான் றன்னைச் செறுவரைக் கீழ் அடர்த்தருளிச் செய்கை யெல்லா, மறிந்தேனடியேனை யஞ்சேலென்னு மாவடு தண் டுறையுறையு மமரரேறே.

திருச்சிற்றம்பலம்

சுவாமி பெயர்-மாசிலாமணித்தியாகேசுவரர்
தேவியார்-ஒப்பிலாமுலையம்மை.

திருவானைக்கா-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

எத்தாய ரெத்தந்தை யெச்சுற்றத்தா ரெம்மாடு சும் மாடா மேவர்நல்லார், செத்தால்வந் துதவுவாரொருவ ரில்லைச் சிறுவிறகாற்றீ மூட்டிச் செல்லா நிற்பர், சித் தாயவேடத்தாய் நீடுபொன்னித் திருவானைக்காவுடைய செல்வாவென்ற, னத்தாவுன் பொற்பாதமடையப் பெற்று லல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. 1

ஊனாகியுயிராகி யதனுணின்ற வுணர்வாகிப் பிற வனைத்து நீயாய்நின்றாய், நானேது மறியாமே யென் னுள்வந்து நல்லனவுந் தீயனவுங் காட்டாநின்றாய்,தேனு ருங் கொன்றையனே நின்றியூராய் திருவானைக் காவி லுறை சிவனேஞான, மானாயுன் பொற்பாத மடையப் பெற்று லல்லகண்டங் கொண்டடியே னென் செய் கேனே. 2

உரையாரும் புகழானே யொற்றியூரா கச்சியே கம் பனே காரோணத்தாய், விரையாரு மலர்தூவி வணங்கு வார் பான்மிக்கானே யக்கரவ மாரம்பூண்டாய், தரை

யாரும் புனற் பொன்னித் தீர்த்த மல்கு திருவானைக் காவிலுறைதேனே, ரரையாவுன் பொற்பாத மடையப் பெற்றா லல்லகண்டங் கொண்டாடியே னென் செங் கேனே. 3

கொடியேயும் வெள்ளேற்றாய் கூளியாடக் குறட் பூதங்கூத்தாட நீயுமாடி, வடிவேயு மங்கைதனை வைத்த மைந்தா மதிலானைக் காவிளாய் மாகாளத்தாய்படியேயுங் கடலிலங்கைக் கோமான்றன்னைப் பருமுடியுந் திர டோளு மடர்த்துகந்த, அடியேவந் தடைந்தடிமையாகப் பெற்றா லல்லகண்டங் கொண்டடியே னென் செய் கேனே. 4

திருச்சிற்றம்பலம்

சுவாமி பெயர்-ஐம்புகேசுவரர்.

தேவியார்-அகிலாண்டவல்லியம்மை.

தனித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அப்பனுநீ யம்மையுநீ யையனுநீ யன்புடையமாமனு மாமியுநீ, யொப்புடைய மாதரு மொண்பொருளுநீ யொரு குலமுஞ் சுற்றமு மோரூருநீ, துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ துணையாயென், னெஞ்சுந் துறப்பிப் பாய்நீ, யிப்பொன்நீ யிம்மணிநீ யிம்முத்துநீ யிறைவநீ யேறூர்ந்த செல்வ நீயே. 1

திருகோயிலில்லாத திருவிலூருந் திருவெண்ணீ றணியாத திருவிலூரும், பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும் பாங்கினொடு பலதளிக ளில்லாவூரும், விருப் போடு வெண்சங்க மூதாவூரும் விதானமும் வெண்

கொடியு மில்லாவூரும், விருப்போடு மலர்பறித்திட்டுண்
ணுவூரு மவையெல்லா மூரல்ல வடவிகாடே. 2

திருநாம மஞ்செழுத்துஞ் செப்பாராகிற்றீவண்ணர்
திறமொருகாற் பேசாராகி, லொருகாலுந் திருக்கோயில்
சூழாராகி, லுண்பதன் முன் மலர்பறித்திட்டுண்ணாராகி,
லருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகி லளியற்றார்
பிறந்தவாறேதோவென்னிற், பெருநோய் கண்மிக நலி
யப்பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி
யிறக்கின்றாரே, 3

குலம்பொல்லேன் குணம் பொல்லேன் குறியும்
பொல்லேன் குற்றமே பெரிதுடையேன் கோலமாய,
நலம்பொல்லே னான் பொல்லேன் ஞானியல்லே னல்
லாரோ டிசைந்திலே னடுவே னின்ற விலங்கல்லேன்
விலங்கல்லா தொழிந்ததே னல்லேன் வெறுப்பனவு
மிகப்பெரிதும் பேசவல்லேன், இலம்பொல்லே னிரப்
பதே யீயமாட்டே னென்செய்கேன் றேன்றினே
னேழையேனே. 4

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடு
வானாளத் தருவரேனு, மங்குவா ரவர்செல்வ மதிப்போ
மல்லோ மாதேவர்க்கேகாந்த ரல்லாராகில், அங்கமெல்
லாங் குறைந்தழுகு தொழுநோயரா யாவுரித்துத்
தின்றுழலும் புலையரேனுங், கங்கைவார் சடைக்கரந்
தார்க் கன்பராகி லவர்கண்டீர் யாம் வணங்குங் கடவு
ளாரே. 5

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவடிகளே சரணம்

———

உ

சிவமயம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த

தேவாரப் பதிகங்கள்

திருவெண்ணெய்நல்லூர்-பண்-இந்தளம்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறைசூடி பெருமானேயருளாளா
வெத்தான்மறவாதே நினைக்கின்றேன்மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூர
ருட்டுறையு
ளத்தாவுனக்காளாயினி யல்லேனெனலாமே. 1

நாயேன்பலநாளுநினைப் பின்றி மனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன்பர லாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட்டுறையு
ளாயாவுனக்காளாயினி யல்லேனெனலாமே. 2

மன்னேமறவாதேநினைக் கின்றேன்மனத்துன்னைப்
பொன்னேமணிதானேவயி ரம்மேபொருந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூ
ரருட்டுறையு
ளன்னேயுனக்காளாயினி யல்லேலெனவாமே. 3

முடிமேனினிப்பிறவேன்பெறின்மூவேன்பெற்றமூர்த்தி
கொடியேன்பலபொய்யேயுரைப் பேனைக்குறிக்கொ
ண்ணீ

செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட்டுறையு
ளடிகேளுனக்காளாயினி யல்லேனெனலாமே. 4

பாதம்பணிவார்கள் பெறும்பண்டமதுபணியா
யாதன்பொருளானேனறி வில்லேனருளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட்டுறையு
ளாதீயுனக்காளாயினி யல்லேனெனலாமே. 5

தண்ணார்மதிசூடி தழல்போலுந்திருமேனி
யெண்ணார்புரமூன்றுமெரி யுண்ணநகைசெய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர
ருட்டுறையு
ளண்ணாவுனக்காளாயினி யல்லேனெனலாமே. 6

ஊனாயுயிரானாயுட லானாயுலகானாய்
வானாய்நிலனானாய்கட லானாய்மலையானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூ
ரருட்டுறையு
ளானாயுனக்காளாயினி யல்லேனெனலாமே. 7

ஏற்றார்புரமூன்றுமெரி யுண்ணச்சிலைதொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர்வானீ
ரேற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூர
ருட்டுறையு
ளாற்றாயுனக்காளாயினி யல்லேனெனலாமே. 8

மழுவாளவலனேந்திமறை யோதீமங்கைபங்கா
தொழுவாரவர் துயராயின் தீர்த்தலுனதொழிலே
செழுவார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூர
ருட்டுறையு
ளழகாவுனக்காளாயினி யல்லேனெனலாமே. 9

காரூர்புனலெய்திக்கரை கல்வித்திரைக்கையாற்
மாரூர்புகழெய்தித்திகழ் பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூ
ரருட்டுறையு
ளாரூரனெம்பெருமாற்கா ளல்லேனெனலாமே. 10

திருச்சிற்றம்பலம்

சுவாமி பெயர்-தடுத் தாட்கொண்ட வீசுரர்.
தேவியார்-வேற்கண்மங்கையம்மை

திருத்தொண்டத் தொகை-பண்-கொல்லிக் கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன் திருநீல கண்டத்துக் குயவனார்க்கடியேன், இல்லையே யென்னாத இயற்பகைக்கு மடியேன் இளையான்றன் குடிமாறனடியார்க்கு மடியேன், வெல்லுமாமிக வல்லமெய்ப் பொருளுக்கடியேன் விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கடியே, னல்லிமென் முல்லைமந்தார் அமர்நீதிக்கடியேன் ஆரூரன் ஆரூரிலம்மானுக் காளே. 1

இலைமலிந்தவேனம்பியெறிபத்தர்க்கடியேன் ஏனாதிநாதன் றனடியார்க்கு மடியேன், கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கடியேன் கடவூரிற்கலயன் றனடியார்க்கு மடியேன், மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ்சாறனெஞ்சாதவாட்டாயமடியார்க்கு மடியேன், அலைமலிந்த புனல்மங்கையானாயர்க் கடியேன் ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. 2

*மும்மையா லுலகாண்டமூர்த்திக்குமடியேன் முருக னுக்கும் உருத்திர பசுபதிக்கு மடியேன், செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன் திருக்குறிப்புத் தொண்டர்த மடியார்க்கு மடியேன்,மெய்ம்மையே திரு மேனி வழிபடாநிற்கவெகுண்டெழுந்த தாதைதாள்மழு வினலெறிந்த, அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் மடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாகக்கொண்ட திருநாவுக்கரையன் றனடியார்க்குமடியேன், பெருநம்பி குலச்சிறைதன் னடியார்க்கு மடியேன் பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயர்க்கு மடியே, னொருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியே னொலிபுனல்சூழ் சாத்தமங்கை நீல நக்கர்க்கடியே, னருநம்பி நமிநந்தியடியார்க்குமடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக்காளே. 4

வம்பறு வரிவண்டு மணநாற மலருமது மலர்நற் கொன்றையா னடியலாற்பேணு, எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன் ஏயர்கோன் கலிக்காம னடி யார்க்கு மடியேன், நம்பிரான் திருமூலன டி யார்க்கு மடியேன் x நாட்டமிகு தண்டிக்கு மூர்க்கர்க்கு மடியேன், அம்பரான் சோமாசிமாறனுக்கு மடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக்காளே. 5

---

*விபூதி, ருத்திராக்ஷம், சடைமுடி இவைகளுடன் அரசு செய்தமையால் மும்மையா லுலகாண்ட மூர்த்தி யென்றது.

xபிறவியந்தகரா யிருந்து திருவாரூர் கமலாலய தீர்த்தத் தில் மூழ்கி யெழுந்திருக்கும்போது சுவாமியினுடைய திருவரு ளால் நாட்டம் விளங்கப்பெற்றவ ரென்பதுதோன்ற நாட்டமிகு தண்டிக்கும் என்றருளிச் செய்தது.

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே மறவாதுகல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன், சீர் கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன், செங் காட்டங் குடி மேய சிறுத்தொண்டர்க்கடியேன், கார் கொண்ட கொடைக் *கழறிற் றறிவார்க்கு மடியேன் கடற்காழிக் கணநாதனடியார்க்குமடியே, னூர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 6

பொய்யடிமை யில்லாத புலவர்க்குமடியேன் பொழிற் கருவூர்த் துஞ்சியபுகழ்ச் சோழற்கடியேன், மெய்யனடி னரசிங்க முனையரை யார்க்கடியேன் விரி திரைசூழ் கடனு கையதி பத்தர்க்கடியேன், கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன், சழற் 0 சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன், ஐயடிகள் காடவர்க்கோ னடியார்க்கு மடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 7

கறைகண்டன் கழலடியே காப்புக்கொண்டிருந்த கணம் புல்ல நம்பிக்குங்காரிக்குமடியே னிறைகொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன், துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித் தொன்மயிலை வாயிலா னடி யார்க்குமடியேன், னறைக்கொண்ட வேல்நம்பி முனை யடியார்க்கடியேன், ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 8

---

*கழறிற்றறிவார்-சேரமானுயனர்.

0 சத்திவரிஞ்சையர்கோன் என்பதை வரிஞ்சையூர்ச் சத் தியாரென மாற்றுக.

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன், மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை மன்னவனுஞ் செருத்துணைத னடியார்க்குமடியேன், புடைசூழ்ந்த புலியதன்மேலரவாடவாடி பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியேன், அடல்சூழ்ந்த வேலநம்பி கோட்புலிக்கு மடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 9

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன் பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன், சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார்க்கு மடியேன் திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கு மடியேன், முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன் முழுநீறுபூசியமுனிவர்க்கு மடியேன், அப்பாலு மடிசார்ந்தா ரடியார்க்கு மடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 10

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப்பூசல் வல்வினையான் மானிக்கு நேசனுக்கு மடியேன், தென்னவனு யுலகாண்ட செங்கணார்க் கடியேன் திருநீலகண்டத்துப் பாணனார்க்கடியே, னென்னவனு மரனடியே யடைந்திட்ட சடைய னிசை ஞானி காதலன் திருநாவலூர்க்கோ, னன்னவனு மாரூர னடிமைகேட்டுப் பாராரூரி லம்மானுக் கான்பராவரே. 11

திருச்சிற்றம்பலம்

இது சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரர் பரவைநாச்சியார் திருமாளிகையிலிருந்து வீதிவிடங்கப் பெருமானைத் தரிசிக்கும் பொருட்டு ஆலயத்துக்கு ளெழுந்தருளும்போது தேவாசாரிய மண்டபத்தில் வீற்றிருக்குஞ்

சிவனடியார்களை யுள்ளத்தால் வணங்கி இவர்களுக்கு நானடியேனாகும்படி பரமசிவம் எந்நாளும் கிருபை செய்யுமென்று சொல்லுகையில் சிவபெருமான் எதிரில் தரிசனங் கொடுத்தருளித் 'தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியே' னென்று முதலடி யெடுத்துக் கொடுக்கப் பாடி துதிசெய்த பதிகம்.

திருமழபாடி-பண்-நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பொன்னார்மேனியனே புலித்தோலையரைக்கிசைத்து
மின்னார்செஞ்சடைமேல்துளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியே மழபாடியுள் மாணிக்கமே
யன்னேயுன்னையல்லா லினியாரை நினைக்கேனே. 1

கீளார்கோவணமுந் திருநீறுமெய்பூசியுன் றன்
றாளேவந்தடைந்தேன் றலைவாவெனையென்றுகொணீ
வாளார்கண்ணிபங்கா மழபாடியுள்மாணிக்கமே
கேளாநின்னையல்லா லினியாரை நினைக்கேனே. 2

எம்மானெம்மனையென் றெனக்கெட்டனைச்சார்வாக
ரிம்மாயப்பிறவிபிறந்தே யிறந்தெய்த்தொழிந்தேன்
மைம்மாம்பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
யெம்மானின்னையல்லா லினியாரை நினைக்கேனே. 3

பண்டேனின்னடியே னடியாரடியார்கட்கெல்லாம்
தொண்டேபூண்டொழிந்தேன் றொடராமைத்துரிசறுத்
வண்டார்பூம்பொழில்சூழ்மழபாடியுள்மாணிக்கமே[தேன்
றண்டாநின்னையல்லா லினியாரைநினைக்கேனே. 4

கண்ணேயேழுலகுங் கருத்தாயவருத்தமுமாய்ப்
பண்ணாரின்றமிழாய்ப் பரமாய்பரஞ்சுடரே
மண்ணார்பூம்பொழில்சூழ் மழபாடியுள்மாணிக்கமே
யண்ணாநின்னையல்லா லினியாரைநினைக்கேனே. 5

நாளார்வந்தணுகி நலியாமுன்னின்றனக்கே
யாளாவந்தடைந்தே னடியேனையுமென்றுகொணீ
மாளாநாளருளு மழபாடியுள் மாணிக்கமே
யாளாநின்னையல்லா லினியாரைநினைக்கேனே. 6

சந்தாருங்குழையாய் சடைமேற்பிறைதாங்கிநல்ல
வெந்தார்வெண்பொடியாய் விடையேறியவித்தகனே
மைந்தார்சோலைகள்சூழ் மழபாடியுள்மாணிக்கமே
யெந்தாய்நின்னையல்லா லினியாரை நினைக்கேனே. 7

வெய்யவிரிசுடாரான் மிகுதேவர்கணங்களெல்லாஞ்
செய்யமலர்களிட மிகுசெம்மையுள்நின்றவனே
மையார்பூம்பொழில்சூழ் மழபாடியுள்மாணிக்கமே
யையாநின்னையல்லா லினியாரைநினைக்கேனே. 8

நெறியேநின்மலனே நெடுமாலயன்போற்றிசெயுங்
குறியேநீர்மையனே கொடியேரிடையாள்தலைவா
மறிசேரங்கையனே மழபாடியுள்மாணிக்கமே
யறிவேநின்னையல்லா லினியாரைநினைக்கேனே. 9

ஏரார்முப்புரமு மெரியச்சிலைதொட்டவனை
வாரார்கொங்கையுடன் மழபாடியுள்மேயவனைச்
சீரார் நாவலர்கோ னூரனுரைத்தமிழ்ப்
பாரோரேத்தவல்லார் பரலோகத்திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்

சுவாமி பெயர்-வச்சிரத்தம்பநாதர்.

தேவியார்-அழகாம்பிகையார்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவடிகளே சரணம்.

உ

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

திருவாசகம்

சிவபுராணம்

சிவனதநாதிமுறைமையானபழமை
திருப்பெருந்துறையி லருளிச்செய்யப்பட்டது.

கலிவெண்பா

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
விமைப்பொழுது மென்னெஞ்சினீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்டகுருமணிதன் றாள்வாழ்க
வாகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
வேக னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன்க ழல்வெல்க
வீசனடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி! சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி

மாராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனா
லவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
யெண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளி
யெண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ்சீர் [யா
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருச மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாது நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றே
னுய்யவென் னுள்ளத்து ளோங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்க
ளையா வெனவோங்கி வாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
யெஞ்ஞான மில்லாத வின்பப் பெருமானே
யஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
யாக்க மளவிறுதி யில்லா யனைத்துலகு
மாக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பி
னாற்றத்தி னேரியாய் சேயாய் நணியனே

மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுட்டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமா
னிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான்வல்வினையோன்றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
யறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகி கசிந்துள்ளுருகு
நலந்தா னிலதா சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
பாரா வமுதே யளவிலாப் பெம்மானே
யோராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
யின்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
யன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
யாதியனே யந்த நடுவாகி யல்லானே

யீர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ்ஞானத்தாற்கொண்டுணர்வார்தங்கருத்தி
னோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
யாற்றின்ப வெள்ளமே யத் தாமிக் காய்நின்ற
தோற்றச்சுடரொளியாய்ச்சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றந் தெளிவேயென் சிந்தனையு
ளூற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
வாற்றேனெம்மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம்பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
யல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

திருவெம்பாவை

சத்தியை வியந்தது

திருவண்ணாமலையி லருளிச்செய்யப்பட்டது

வெண்டளையான்வந்த இயற்றரவிணைக்கொச்சகக்கலிப்பா

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை
யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோ
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து [ய்
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம் தோழி பரிசேலோரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குங்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாமரரேலோரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்நகையாய்முன்வந்தெதிர் எழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்றள்ளூறித்

தித்திக்கப்பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம்புன்மைதீர்த்தாட் கொண்டாற்பொல்லா
எத்தோநின் அன்புடைமைஎல்லோம் அறியோமோ[தோ
சித்தம் அழகியார் பாடாரோ நமசிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொள்ளவா சொல்லுவோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோரெம்பாவாய். 4

மால்அறிவா நான்முகனுங் காணுமலையினைநாம்
போல்அறிவோம் என்றுள்ள பொக்கங்களேபேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ கடைத்திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிச் சோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன என்றலும் நாணுமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலை அளித்தாட் கொண்டருளும்

வானவார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தம்கோனைப் பாடேலோரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் காரியான் ஒருவன் இருஞ்சீரான
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய் [மூஞ்
என்னானை என் அரையன் இன்னமுதென் றெல்லோ
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வல்நெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழ்இல் பரஞ்சோதி கேழ்இல் பரங்கருணை
கேழ்இல் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய் [யோ
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே
உன்னைப் பிரான் ஆகப் பெற்றஉன் சீர் அடியோம்
உன் அடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்கா
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர்உகந்து [வோம்
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபாற் றிருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டர்உளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆர்உற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்ஆர்தடம்பொய்கைபுக்கு முகேர்என்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழி அடிபோம் வாழ்ந்தோங்காண் ஆர்கழல்போற்
செய்யாவெண் நீறாடி செல்வா சிறுமருங்குல்
மைஆர் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீ ஆடுங்
கூத்தன் இவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பாவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகளும் பொய்கை குடைக்குடையாள் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்

தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எம்கோனும் போன்றிசைந்த
பொங்கும் மடுவிற் பகப்பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூப்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழை ஆடப் பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல் ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள் ஆ மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடலோரெம்பாவாய். 14

ஓர் ஒருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீர் ஒருகால் வாய்ஓவாள் சித்தங் களிகூர
நீர் ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பார்ஒருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேர் அரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வார்உருவப் பூண்முலையீர் வாய்ஆர நாம்பாடி
ஏர்உருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 15

முன் இக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்

என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிறவிலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன் நமக்கு முனசுரக்கும் இன் அருளே
என்னப் பொழியாய் மழையேலோரெம்பாவாய். 16

செங்கண் அவன்பால் திசைமுகன் பால்தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைகோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணுமலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணாரிரவி சதிர்வந்து கார்கரப்பத்
தண்ணாரொளி மழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி யாணாயலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோரெம்பா
வாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எம்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க
எம்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல் எம்கண் மற்றொன்றுங் காணற்க

இங்கிப்பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில்என் ஞாயிறெமக்கேலோரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி எல்லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணை அடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரீகம்
போற்றியாம் உய்யவாட்கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்

திருப்பொற்சுண்ணம்

ஆனந்தமனோலயம்

தில்லையி லருளிச்செய்யப்பட்டது

அறுசீரடியாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

முத்துநற்றாமம் பூமாலைதூக்கி
முளைக்குடந்தூப நற்றீபம்வைம்மின்
சத்தியுஞ்சோமியும்பார்மகளு
நாமகளோடு பல்லாண்டிசையின்
சித்தியுங்கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும்வந்துகவரிகொண்மி
னத்தனையாறனம்மானைப்பாடி
யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. 1

பூவியல்வார்சடையெம்பிராற்கும்
பொற்றிருச் சுண்ணமிடிக்கவேண்டு
மாவின்மடுவகிரன்ன கண்ணீர்
வம்மின் கள்வந்துடன்பாடுமின்கள்
கூவுமின்றொண்டர்புறநிலாமே
குனிமின் றொழுமினெங்கோனெங்கூத்தன்
றேவியுந்தானும் வந்தெம்மையாளச்
செம்பொன்செய்சுண்ணமிடித்துநாமே. 2

சுந்தரநீறணிந்தும்மெழுகித்
தூயபொன்சிந்திநிதிபரப்பி
யிந்திரன்கற்பகநாட்டியெங்கு
மெழிற்சுடர்வைத்துக்கொடியெடுமி
னந்தரர்கோனயற்றன் பெருமா
னாழியானாதனல்வேலன்றாதை
யெந்தரமாளுமையாள் கொழுநற்
கேய்ந்தபொற்சுண்ணமிடித்துநாமே. 3

காசணிமின்களுலக்கையெல்லாம்
காம்பணிமின்கள்கறையுரலை
நேசமுடையவடியவர்க
ணின்றுனிலாவுகவென்றுவாழ்த்தித்
தேசமெல்லாம்புகழ்ந்தாடுங்கச்சித்
திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடிப்
பாசவினையைப்பறித்துநின்று
பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. 4

அறுகெடுப்பாரயனும்மரியு
மன்றிமற்றிந்திரனோடமரர்
நறுமுறுதேவர்கணங்களெல்லா
நம்மிற்பின்பல்லதெடுக்கவொட்டோஞ்
செறிவுடைமும்மதிலெய்தவில்லி
திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடி
முறுவற்செவ்வாயினீர்முக்கணப்பற்
காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. 5

உலக்கைபலவோச்சுவார்பெரிய
ருலகமெலாமுரல்போதாதென்றே

கலக்கவடியவர்வந்துநின்றார்
காணவுலகங்கள்போதாதென்றே
நலக்கவடியோமையாண்டு கொண்டு
நாண்மலர்ப்பாதங்கள்சூடத்தந்த
மலைக்குமருகனைப்பாடிப்பாடி
மகிழ்ந்துபொற்சுண்ணமிடித்துநாமே. 6

சூடகந்தோள்வளையார்ப்பவார்ப்பத்
தொண்டர்குழாமெழுந்தார்ப்பவார்ப்ப
நாடவர்நந்தம்மையார்ப்பவார்ப்ப
நாமுமவர்தம்மையார்ப்பாவர்ப்பப்
பாடகமெல்லடியார்க்குமங்கை
பங்கினனெங்கள் பராபரனுக்
காடகமாமலையன்னகோவுக்
காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. 7

வாட்டங்கண்மடமங்கைநல்லீர்
வரிவளையார்ப்பவண்கொங்கைபொங்கத்
தோட்டிருமுண்டந்துதைந்திலங்கச்
சோற்றெம்பிரானென்றுசொல்லிச்சொல்லி
நாட்கொண்டநாண்மலர்ப்பாதங்காட்டி
நாயிற்கடைப்பட்டநம்மையிம்மை
யாட்கொண்டவண்ணங்கள் பாடிப்பாடி
யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. 8

வையகமெல்லாமுரலதாக
மாமேருவென்றுமுலக்கைநாட்டி
மெய்யெனுமஞ்சணீறையவட்டி
மேதகுதென்னன்பெருந்துறையான்

செய்யதிருவடிபாடிப்பாடிச்
செம்பொனுலக்கைவலக்கைபற்றி
மையண்ணிதில்லைவாணனுக்கே
மாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. 9

முத்தணிகொங்கைகளாடவாட
மொய்குழல்வண் டினமாடவாடச்
சித்தஞ்சிவனொடுமாடவாடக்
செங்கயற்கணபணியாடவாடப்
பித்தெம்பிரானொடுமாடவாடப்
பிறவிபிறரொடுமாடவாட
வத்தன் கருணையொடாடவாட
வாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. 10

மாடுநகைவாணிலாவெறிப்ப
வாய்திறந்தம்பவளந்துடிப்பப்
பாடுமினந்தம்மையாண்டவாறும்
பணிகொண்டவண்ணமும்பாடிப்பாடித்
தேடுமினெம்பெருமானைத்தேடிச்
சித்தங்களிப்பத்திகைத்துத்தேறி
யாடுமினம்பலத்தாடினானுக்
காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. 11

மையமர்கண்டனை வானநாடர்
மருந்தினைமாணிக்கக்கூத்தன் றன்னை
யையனையையர்பிரானைநம்மை
யகப்படுத்தாட்கொண்டருமைகாட்டும்
பொய்யர்தம்பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக்கண்ணிணைப்பொற்றொடித்தோட்

பைமரவல்குன்மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. 12

மின்னிடைச்செந்துவர்வாய்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர்மென்மொழியீ
ரென்னுடையாரமுதெங்களப்ப
னெம்பெருமானிமவான்மகட்குத்
தன்னுடைக்கேள்வன்மகன்றகப்பனை
றமையனெம்மையன்றாள்கள்பாடிப்
பொன்னுடைப்பூண்முலைமங்கைநல்லீர்
பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே. 13

சங்கமரற்றச்சிலம்பொலிப்பத்
தாழ்குழல்சூழ்தருமாலையாடச்
செங்கனிவாயிதழுந்துடிப்பச்
சேயிழையீர்சிவலோகம்பாடிக்
கங்கையிரப்பவாவிரைக்குங்
கற்றைச்சடையான்கழற்கே
பொங்கியகாதலிற்கொங்கைபொங்கப்
பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே. 14

ஞானக்கரும்பின் றெளியப்பாகை
நாடற்கரியநலத்தைநந்தாத்
தேனைப்படிச்சுவையாயினனைச்
சித்தம்புகுந்துதித்திக்கவல்ல
கோனைப்பிறப்பறுத்தாண்டுகொண்ட
கூத்தனைநாத்தழும்பேறவாழ்த்திப்
பானற்றடங்கண்மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. 15

ஆவகைநாமும்வந்தன்பர்தம்மோ
டாட்செயும்வண்ணங்கள் பாடிவிண்மேற்
றேவர்கனுவிலுங்கண்டறியாச்
செம்மலர்பாதங்கள்காட்டுஞ்செல்வச்
சேவகமேந்தியவெகொடியான்
சிவபெருமான் புரஞ்செற்றகொற்றச்
சேவகனுமங்கள்பாடிப்பாடிச்
செப்பொன்செய்சுண்ணமிடித்துநாமே. 16

தேனகலாமலர்க்கொன்றைபாடிச்
சிவபுரம்பாடித்திருச்சடைமேல்
வானகமாதிப்பிள்ளைபாடி
மால்விடைபாடிவலக்கையேந்து
மூனகமாமழுச்சூலம்பாடி
யும்பருமிம்பருமுய்யவன்று
போனகமாகநஞ்சுண்டல்பாடிப்
பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே. 17

அயன்றலைகொண்டுசெண்டாடல்பாடி
யருக்கனெயிறுபறித்தல்பாடிக்
கயந்தனைக்கொன்றுரிபோர்த்தல்பாடிக்
காலனைக்காலாலுதைத்தல்பாடி
யியைந்தனமுப்புரமெய்தல்பாடி
யேழையடியோமையாண்டு கொண்ட
நயந்தனைப்பாடிநின்றாடியாடி
நாதற்குச்சுண்ணமிடித்துநாமே. 18

வட்டமலர்க்கொன்றைமாலை பாடி
மத்தமும்பாடிமதியும்பாடிச்

சிட்டர்கள்வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம்பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டியமாசுணக்கச்சைபாடிக்
கங்கணம்பாடிக்கவித்தகைகம்மே
விட்டுநின்றாடுமரவம்பாடி
யீசற்குச்சுண்ணமிடித்துநாமே. 19

வேதமும்வேள்வியுமாயினார்க்கு
மெய்ம்மையும்பொய்ம்மையுமாயினார்க்குச்
சோதியுமாயிருளாயினார்க்கு
மாயின்பமாயினார்க்குப்
பாதியுமாய்முற்று மாயினார்க்குப்
பந்தமுமாய்வீடுமாயினாருக்
காதியுமந்தமுமாயினாருக்
காடப்பொற்சுண்ணமிடித்துநாமே.

திருச்சிற்றம்பலம்

திருச்சாழல்

சிவனுடைய காருணியம் தில்லையிலருளிச் செய்யப்பட்டது.

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா

திருச்சிற்றம்பலம்

பூசுவதும்வெண்ணீறு பூண்பதுவும்பொங்கரவம்
பேசுவதுந்திருவாயன் மறைபோலுங்காணேடீ
பூசுவதும்பேசுவதும் பூண்பதுவுங்கொண்டென்னை
யீசனவனெவ்வுயிர்க்கு மியல்பானுன்சாழலோ. 1

என்னப்பனெம்பிரா னெல்லார்க்குந்தானீசன்
றுன்னம்பொய்கோவணமாக கொள்ளுமதுவென்னேடீ
மன்னுகலை துன்னுபொருண்மறைநான்கேவான்சரடாத்
தன்னையேகோவணமாச் சாத்தினன்காண்சாழலோ. 2

கோயில்சுடுகாடு கொல்விபுலித்தோ னல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன்காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்றனியனாயிடினுங்
காயிலுலகனைத்துங் கற்பொடிகாண்சாழலோ. 3

அயனைஅநங்கனையந் தகனைச்சந்திரனை
வயனங்கண்மாயா வடுச்செய்தான்காணேடீ
நயனங்கண்மூன் றுடைய நாயகனே தண்டித்தாற்
சயமன்றேவானவர்க்குத் தாழ்குலாய்சாழலோ. 4

தக்கனையுமெச்சனையுந் தலையறுத்துத்தேவர்கணந்
தொக்கெனவந்தவர் தம்மைத் தொலைத்ததுதானென்னேடீ
தொக்கெனவந்தவர்தம்மைத்தொலைத்தருளியருள்கொடுத்தங்
கெச்சனுக்குமிகைத்தலைமற்றருளினன்காண்சாழலோ.

அலரவனுமாலவனு மறியாமேயழலுருவாய்
நிலமுதற்கீழண்டமுற நின்றதுதானென்னேடீ
நிலமுதற்கீழண்டமுற நின்றிலனேலிருவருந்தஞ்
சலமுகத்தாலாங்காரந் தவிரார்காண்சாழலோ. 6

மலைமகளையொருபாகம் வைத்தலுமேமற்றொருத்தி
சலமுகத்தாலவன்சடையிற் பாயுமதுவென்னேடீ
சலமுகத்தாலவன்சடையிற் பாய்ந்திலனேற்றரணியெல்லாம்
பிலமுகத்தேபுகப்பாய்ந்து பெருங்கேடாஞ்சாழலோ. 7

கோலாலமாகிக் குரைகடல்வாயன்றெழுந்த
வாலாலமுண்டானவன் சதுர்தானென்னேடீ
யாலாலமுண்டிலனே லன்றயன்மாலுள்ளிட்ட
மேலாயதேவரெல்லாம் வீடுவர்காண்சாழலோ. 8

தென்பாலுகந்தாடுந் தில்லைச்சிற்றம்பலவன்
பெண்பாலுகந்தான் பெரும்பித்தன்காணேடீ
பெண்பாலுகந்திலனேற் பேதாயிருநிலத்தோர்
விண்பாலியோகெய்தி வீடுவர்காண்சாழலோ. 9

தானந்தமில்லான்றனை யடைந்தநாயேனை
யானந்தவெள்ளத் தழுத்துவித்தான்காணேடீ
யானந்தவெள்ளத் தழுத்துவித்ததிருவடிகள்
வானுந்துதேவர்கட்கோர்வான்பொருள்காண்சாழலோ.

நங்காய்இதென்ன தவ நரம்போடெலும்பணிந்து
கங்காளந்தோண்மேலே காதலித்தான்காணேடீ
கங்காளமாமாகேள் காலாந்தரத்திருவர்
தங்காலஞ்செய்யத் தரித்தனன்காண்சாழலோ. 11

கானார்புலித்தோ லுடைதலையூண்காடுபதி
யானவனுக்கிங் காட்படுவாராரேடீ
யானாலுங்கேளா யயனுந்திருமாலும்
வானாடர்கோவும் வழியடியார்சாழலோ. 12

மலையரையன் பொற்பாவைவாணுதலாள்பெண்டிருவை
யுலகறியத்தீவேட்டா னென்னுமதுவென்னேடீ
யுலகறியத்தீவேளா தொழிந்தனனே லுலகனைத்துங்
கலைநவின்றபொருள்களெல்லாங் கலங்கிடுங்காண்சாழலோ. 13

தேன்புக்கதண்பணைசூழ் தில்லைச்சிற்றம்பலவன்
றான்புக்குநட்டம் பயிலுமதுவென்னேடீ
தான்புக்குநட்டம் பயின்றிலனேற்றரணியெல்லா
மூன்புக்கவேற்காளிக் கூட்டாங்காண்சாழலோ. 14

கடகரியும் பரிமாவுந் தேருமுகந்தேறாதே
யிடபமுகந்தேறியவா றெனக்கறியவியம்பேடீ
தடமதில்களவைமூன் றுந் தழலெரித்தவந்நாளி
லிடபமதாய்த்தாங்கினான் றிருமால்காண்சாழலோ. 15

நன்றாகநாவலர்க்கு நான்மறையினுட்பொருளை
யன்றாலின்கீழிருந்தங் கறமுரைத்தான்காணேடீ
யன்றாலின்கீழிருந்தங் கறமுரைத்தானாயிடினுங்
கொன்றான்காண்புரமூன் றுங்கூட்டோடேசாழலோ. 16

அம்பலத்தேகூத்தாடி யமுதுசெயப்பலிதிரியு
நம்பனையுந்தேவனென்று நண்ணுமதுவென்னேடீ
நம்பனையுமாடாகே ணான்மறைகடாமறியா
வெம்பெருமானீசாவென் றேத்தினகாண்சாழலோ. 17

சலமுடையசலந்தரன்ற னுடறடிந்தநல்லாழி
நலமுடையநாரணற்கன் றருளியவாறென்னேடீ
நலமுடையநாரணன்ற னயனமிடந்தானடிக்கீ
ழலராகவிடவாழி யருளினன்காண்சாழலோ. 18

அம்பரமாம்புள்ளித்தோ லாலாலமாரமுத
மெம்பெருமா னுண்டசது ரெனக்கறியவியம்பேடீ
யெம்பெருமானே துடுத்தங்கேதமுதுசெய்திடினுந்
தம்பெருமைதானறியாத்தன்மையன்காண்சாழலோ. 19

அருந்தவருக்காலின்கீ ழறமுதலாநான்கனையு
மிருந்தவருக்கருளுமது வெனக்கறியவியம்பேடீ
யருந்தவருக்கறமுதனான் கன்றருளிச்செய்திலனேற்
றிருந்தவருக்குலகியற்கை தெரியாகாண்சாழலோ. 20

திருச்சிற்றம்பலம்

அச்சோப் பதிகம்

அநுபவ வழி யறியாமை*

தில்லையி லருளிச்செய்யப்பட்டது.

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

முத்திநெறியறியாத மூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப் பழவினைகள்சாறும்வண்ணஞ்
சித்தமலமறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட
வத்தனெனக்கருளியவா ரூர்பெறுவாரச்சோவே. 1

நெறியல்லாநெறிதன்னை நெறியாகநினைவேனைச்
சிறுநெறிகள்சேராமே திருவருளேசேரும்வண்ணங்
குறியொன்றுமில்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ணமருளியவா ரூர்பெறுவாரச்சோவே. 2

பொய்யெல்லாமெய்யென்று புணர்முலையார்போகத்தே
மையலுறக்கடவேனை மாளாமேகாத்தருளித்
தையலிடங்கொண்டபிரான் றன்கழலேசேரும்வண்ண
மையனெனக்கருளியவா ரூர்பெறுவாரச்சோவே. 3

மண்ணதனிற்பிறந்தெய்த்து மாண்டுவிழக்கடவேனை[ன்
மெண்ணமிலாவன்பருளியெனையாண்டிட்டென்னையுந்த
சுண்ணவெண்ணீறணிவித்துத் தூய்நெறியேசேரும்வ
மண்ணலெனக்கருளியவாரூர்பெறுவாரச்சோவே[ண்ண

பஞ்சாயவடிமடவார் கடைக்கண்ணாலிடர்பட்டு
நெஞ்சாயதுயர்கூறி நிற்பேனுன் னருள்பெற்றேன

---

* அநுபவத்ததிசயம்.

னுஞ்சேனனுடையானே யடியேனைவருகவென்
றஞ்சேலென் றருளியவா ரூர்பெறுவாரச்சோவே. 5

வெந்துவிழுமுடற்பிறவி மெய்யென்றுவினைபெருக்கிக்
கொந்துகுழற்கோல்வளையார் குவிமுலைமேல்வீழ்வேனைப்
பந்தமறுத்தெனையாண்டு பரிசறவென் றுரிசுமறுத்
தந்தமெனக்கருளியவா ரூர்பெறுவாரச்சோவே. 6

தையலார்மையலிலே தாழ்ந்துவிடக்கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந்தாழுருவி
யுய்யுநெறிகாட்டுவித்திட் டோங்காரத்துட்பொருளை
யையனெனக்கருளியவா ரூர்பெறுவாரச்சோவே. 7

சாதல்பிறப்பென்னுந் தடஞ்சுழியிற்றடுமாறிக்
காதலின்மிக்கணியிழையார் கலவியிலேவிழுவேனை
மாதொருகூறுடையபிரான் றன் கழலேசேரும்வண்ண
மாதியெனக்கருளியவா ரூர்பெறுவாரச்சோவே. 8

செம்மைநலமறியாத சிதடரொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்து முதலாயமுதல்வன்று
னம்மையுவோர்பொருளாகிநாய் சிவிகையேற்றுவித்த
வம்மையெனக்கருளியவா ரூர்பெறுவாரச்சோவே. 9

திருச்சிற்றம்பலம்

நால்வர் துதி

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் துதி

புனலிலேடெதிர் செல்லெனச் செல்லுமே புத்தனார் தலைதத்தெனத் தத்துமே, கனலிலேவிடப் பச்சென்றிருக்குமே கதவுமாமறை காட்டிலடைக்குமே, பனியிலாண்பனை பெண்பனையாகுமே பழையவென்பு பொற்பாவையாகுமே, சினவராவிடந்தீரெனத் தீருமே சிறந்தசம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.

திருநாவுக்கரசு சுவாமிகள் துதி

தலைகொணஞ் சமுதாகவிளையுமே தழலினீறு தடாகம் தாகுமே, கொலைசெயானை குனிந்துபணியுமே கூராவிடந்தீரெனத்தீருமே, கலைகொள்வேத வனப்பதிதன்னுளே கதவு மீண்டு கடுகத்திறக்குமே, அலைகொள்வாரியிற் கல்லுமிதக்குமே அப்பர்போற்று மருந்தமிழ்ப் பாடலே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

வெங்கராவுண்ட பிள்ளைபை நல்குமே வெள்ளை வாரணமீதிலிருத்துமே, மங்கைபாகரைத் தூதுநடத்துமே மருவியாறு வழிவிட்டு நிற்குமே, செங்கலானது தங்கமதாகுமே திகழுமாற்றிட்ட செம்பொனளிக்குமே, துங்கவாம்பரி சோற்குநல்குமே துலங்கு நாவலூர்ச் சுந்தரர்பாடலே.

மாணிக்கவாசக சுவாமிகள் துதி

பெருகும் வைகைதனை யழைப்பிக்குமே பிரம்படிக்கும் பிரான் மேனிகன்றுமே, நரியெலாம்பரி யாகநடத்துமே நாடுமூமைதனைப்பேச விக்குமே, பரிவிற்பிட்டுக்கு

மண் சுமப்பிக்குமே பரமனே டெழுதக் கோவை பாடுமே, வருகும் புத்தரைவாதினில்வெல்லுமே வாதவூரர் வழங்கியபாடலே.

நால்வர் துதி

அப்பருக் கெண்பத் தொன்றருள் வாதவூரருக்குச்
செப்பரிய நாலெட்டிற் றெய்வீக—மிப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினாறறி.

நால்வர் முத்தியடைந்த நாள்

சித்திரைச்சதயத்தப்பர் சிறந்தவைகாசிமூலத்
தத்தரைப்பணிசம்பந்த ரானிமாதத்திலந்த
முத்தமிழ்வாதவூரர் முதியநல்லாடிதன்னிற்
சுத்தமாஞ்சோதிநாளிற் சுந்தரர்கயிலைசேர்ந்தார்.
அங்கமாமடந்தையாக வாழியிற்கருங்கலோர்
வங்கமாகமுன்னர்செங்கன் மாழையாகமுகையா
மங்கைவாய்மலர்ந்து பேசவந்துதித்தநால்வர்தம்
பங்கயப் பதம்பணிந்து பாடியாடுவாமரோ.

திருத்தொண்டர்கள் சேக்கிழார் சுவாமிகள் துதி

தில்லைவாழந்தணரே முதலாகச்சீர்படைத்த [போற்றி
தொல்லையதாந்திருத்தொண்டத்தொகையடியார்பதம்
ஒல்லையவர்புராணகதை யுலகறிய விரித்துரைத்த
செல்வமலிகுன்றத்தூர்ச் சேக்கிழாரடிபோற்றி.

திருச்சிற்றம்பலம்

நால்வர் துதி முற்றிற்று.

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1